நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, திண்டுக்கல்

முன்னிலை : திரு.C. தினேஷ்குமார், B.A.,L.L.B.(Hons.).,LL.M.,

நீதித்துறை நடுவர் எண்.II, திண்டுக்கல்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08–ம் நாள் புதன்கிழமை

**Crl.M.P.No.536/2026**

**CNR No.TNDG03-001698-2026**

**Cr.No.42/2025, DCB P.S**

கவியரசன் (42/2025) – A2
த/பெ. ஆறுமுகம்,
சாமியார் புதூர்,
அரசுப்ப பிள்ளைபட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் . . . . மனுதாரர் /எதிரி

/எதிர்/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
மாவட்ட குற்றப்பிரிவு,
திண்டுக்கல்.
குற்ற எண். 42/2025,
சட்டப் பிரிவுகள் 296, 318(3), 318(4), 351(3) of BNS
. . . வாதி / முறையீட்டாளர்

செல்வராஜ் (46/2026),
த/பெ.வீராச்சாமி,
எல்லப்பாளையம்,
எரசனம்பாளையம் அஞ்சல்,
தாராபுரம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்.
. . . மனு இடையீட்டாளர்

இம்மனுவானது இன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ராஜன் சுபாசிஸ், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், நிகழ்நிலைப் புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L. கதிரவன், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை.2 அவர்கள் முன்னிலை ஆகி ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

மனுதாரர்/2ம் எதிரி தரப்பில் 480 BNSS ன் கீழ் 2வது முறையாக பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபர் தரப்பில் 2வது எதிரியை பிணையில் விட ஆட்சேபணை செய்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) அரசு தரப்பு வழக்கானது, இவ்வழக்கின் வாதி திண்டுக்கல் ஒட்டன்சத்திரத்தில் குமரன் ஆட்டோ பைனான்ஸ் நிதி நிறுவனத்தை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வருவதாகவும், மேற்படி நிறுவனத்தில் 6 நபர்கள் பங்குதாரர்களாக உள்ளதாகவும், 1வது எதிரி தானஸ் டோரா கடந்த 2018ம் ஆண்டும் முதல் மாத சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்ததாகவும், அவருக்கு கணினி பற்றிய செயல்பாடுகள் விபரம் தெரிந்த காரணத்தால் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளை சரிபார்த்து பதிவேற்றம் செய்யும் பணி செய்து வந்ததாகவும், அதே நிறுவனத்தில் 2வது எதிரி கவியரசனும் , 1வது எதிரி தானிஷ் டோராவும் காதலித்து 30.09.2024ம் தேதி திருமணம் செய்து கொண்டதாகவும், 3வது எதிரியான ஜேசுபாலன் என்பவர் 1வது எதிரியின் தந்தை என்றும், அவர் ஒட்டன்சத்திரத்தில் அப்பள வியாபாரம் செய்து வருவதாகவும், 1வது எதிரியின் செயல்பாட்டின் மீது நம்பிக்கை இழந்த வாதி கடந்த 3 ஆண்டுகளுக்கு உண்டான வரவு செலவுகளை சரிபார்த்தபோது ரூ.64,00,000/- வரை கையாடல் செய்த விபரம் தெரிந்ததாகவும், வாதி எதிரிகளிடம் இதுகுறித்து கேட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டு கையாடல் செய்த பணத்தில் நகைகளும், நிலம் மற்றும் கார் வாங்கியதாக கூறி நிலத்தை விற்று பணத்தை தருவதாக கூறி ரூ.10 லட்சத்தை கொடுத்துவிட்டு அதன் பின்பு அவர்களது கைபேசிகளை சுவிட்ச் ஆப் செய்துவிட்டதாகவும், ஆகையால் வாதியின் நிறுவனத்தில் பணிபுரிந்து நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றி ரூ.54,00,000/-ஐ கையாடல் செய்தும், வாதியை தகாத வார்த்தைகளால் பேசியும், உன்னை காலி செய்துவிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்.42/2025 சட்டப்பிரிவுகள் 296, 318(3), 318(4), 351(3) of BNS -ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசுத்தரப்பிற்கும், காவல்துறையினருக்கும் பிணை மனுவை பொறுத்து அறிவிப்பு செய்யப்பட்டு, பதில் பெறப்பட்டது. இருதரப்பும் கேட்கப்பட்டது. இம்மனுதாரர் 296, 318(3), 318(4), 351(3) –ன் கீழான குற்றத்திற்கு 24.02.2026–ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் உள்ளார்.

3) மனுதாரர்/2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர்/ 2ம் எதிரிக்கு எதிராக பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் குற்ற மோசடிக்கும் மனுதாரர்/ 2ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், மனுதாரர்/2ம் எதிரியின் வருமானத்தை நம்பியே வழக்கின் 1ம் எதிரி அவரது கைக்குழந்தையுடன் ஜீவனம் செய்து வருவதாகவும், மனுதாரர்/ 2ம் எதிரி 24.02.2026ம் தேதி முதல் நீதிமன்றக் காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/ 2ம் எதிரி சட்டத்திற்கு கட்டுப்பட்டவர் என்றும், வழக்கு விசாரணைக்கு தலைமறைவு ஆகமாட்டார் என்றும், மனுதாரர்/2ம் எதிரியை பிணையில் விடுவித்தால் தக்க ஜாமீன்தாரர்களை வழங்க தயாராக இருப்பதாக வாதிட்டார்.

4) பாதிக்கப்பட்ட நபர் தரப்பில் 2ம் எதிரியை பிணையில் விட ஆட்சேபணை செய்து மனு தாக்கல் செய்து, ஆட்சேபனை செய்ய அனுமதி அளித்தும், அவர் தனது மனுவில் 1, 2 எதிரிகள் தனது குமரன் ஆட்டோ பைபான்ஸ் நிதி நிறுவனத்திற்குச் சொந்தமான பணத்தை திருடி அதற்கேற்றாற்போல் போலியான கணக்குகளை மோசடியாக எழுதி வைத்து, அந்த பணத்தின் மூலம் 1வது எதிரி ஆபரணங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனம் வாங்கியும், 3வது எதிரியின் பெயரில் சொத்துக்கள் வாங்கியும் தனது நிறுவனத்தை மோசடி செய்துள்ளதாகவும், 2ம் எதிரி பிணையில் சென்றால் 1 மற்றும் 3வது எதிரிகளுடன் சேர்ந்து மோசடி செய்த பணத்துடன் தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதாகவும், சாட்சிகளை மிரட்டி தடயங்களை அழிக்கக்கூடும் என்பதாலும், விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தலைமறைவாகி விடக்கூடும் என்பதாலும் மனுதாரர்/2ம் எதிரியை பிணையில் விடுவதற்கு கடும் ஆட்சேபணம் தெரிவித்துள்ளார்.

5) பதில் அறிவிப்பில் திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.42/2025 சட்டப் பிரிவுகள் 296, 318(3), 318(4), 351(3) of BNS–ன் படியான வழக்கு விசாரணையில் உள்ளது என்றும், எதிரி கடந்த 24.02.2026ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் இருந்து வருவதாகவும், இவ்வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், வழக்குச் சொத்துக்களை கைப்பற்ற வேண்டியுள்ளதாலும், மேற்படி 2ம் எதிரியை பிணையில் விடுவித்தால் சாட்சிகளை மிரட்டி தடயங்களை அழிக்கக்கூடும் என்பதாலும், வெளியூர் சென்று தலைமறைவாகி விடக்கூடும் என்பதாலும் 2ம் எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

6) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது பதில் அறிவிப்பிலும் தனது வாதுரையிலும், வழக்கு விசாரணையில் இருந்து வருவதாலும், எதிரி பிணையில் சென்றால் தலைமறைவாகி விடக்கூடும் என்பதாலும் 2ம் எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபணை தெரிவித்தார்.

7) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இருதரப்பு வாதங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும், எதிரி குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளாரா என்பது வழக்கு விசாரணையின் மூலமே தெரிய வரும் என்ற எதிரி தரப்பு வாதத்தினை கருத்தில்கொண்டும், எதிரி வழக்கின் விசாரணைக்கு தலைமறைவு ஆகமாட்டார் என்ற என்ற எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தினை கருத்தில் கொண்டும், எதிரியானவர் தொடர்ந்து 44 நாள்கள் சிறையில் இருந்த நாட்களை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், மேலும் எதிரியின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டும், எதிரி பிணையில் சென்றால் சாட்சிகளையோ, ஆதாரங்களையோ கலைக்க மாட்டார் என்ற எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தினை கருத்தில் கொண்டும், மனுதாரர் / எதிரியை பிணையில் விடுவது இவ்வழக்கில் பாதிப்பு ஏற்படாது என்று கருதி கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் எதிரியின் பிணை மனுவானது அனுமதிக்கக்கப்படுகிறது.

i. The petitioner/ accused is ordered to be released on bail on a condition to deposit a sum of Rs.50,000/- in the account of Judicial Magistrate No.II court, Dindigul and to execute a bond for a sum of Rs.25,000/- (Rupees Twenty Five Thousand Only ) with two sureties each for a like sum with solvency among which shall be one Blood Surety.

ii. The petitioner on his release from prison shall report before the respondent Police Station every day at 10.30 A.M and sign for 30 days.

iii. The petitioner shall not indulge in similar kind of offenses.

iv. The petitioner shall not abscond, either investigation or during trial.

v. The petitioner shall not tamper the witness or interfere to smooth progress of the investigation and the petitioner should appear before the investigation officer when required for the interrogation.

vi. If the petitioner thereafter abscond, a fresh FIR may be filed U/s. 269 of BNS.

vii. The petitioner /accused shall appear before this court on summons.

இறுதியாக இப்பிணை மனு அனுமதிக்கப்படுகிறது.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதன்கிழமை 08-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.08 15:22:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.